
Price 50 Ps. only

# நற்கருணை வீரன்

இதழ் 54 ஜுன் 2007 எண் 6



"என்னைக் காப்பாற்றுங்கள்"

ஒரு காட்டில் ஒரு முனிவர் தவம் செய்துகொண்டிருந்தார். ஆழ்ந்த தியானத்தில் இருந்த அவருக்கு யாரோ தேம்பி அழும் குரல் கேட்டது. அந்த அழுகையின் இடையே "குருவே, என்னைக் காப்பாற்றுங்கள்... என்னைக் காப்பாற்றுங்கள்" என்னும் வேண்டுதல் கேட்டது. அந்தத் துயரக் குரலைக் கேட்டவுடனே அந்த முனிவர் கண்களைத் திறந்து பார்த்தார். அவர் முன்னே ஓர் எலி! அச்சத்தால் உடலெல்லாம் நடுங்கிக் கொண்டு "என்னைக் காப்பாற்றுங்கள்" என்று உருக்கமாக அவரை வேண்டியது.

"கவலைப்படாதே... உனக்கு என்ன நடந்தது? நான் நிச்சயம் உனக்கு உதவி செய்வேன்" என்று அந்த முனிவர் பரிவோடு கூறினார். "ஐயா, என்னை ஒரு பூனை துரத்திக்கொண்டே வருகிறது. நான் எங்குச் சென்றாலும் அதுவும் என்னைப் பின் தொடர்கிறது. எனக்கு நீங்கள்தான் உயிர்ப்பிச்சை தரவேண்டும்" என்று அந்த எலி அவரை அடைக்கலம் கேட்டது. "இனிமேல் அந்தப் பூனை மட்டுமல்ல; எந்தப் பூனையும் உன்னை ஒன்றும் செய்யாது. ஏனென்றால் உன்னையும் நான் ஒரு பூனையாக்கி விடுகிறேன். இனிமேல் பூனைகள் உனக்கு எதிரிகளல்ல; நண்பர்களாகிவிடுவார்கள்" என்று கூறி தனது தவ வல்லமையால் அந்த எலியைப் பூனையாக்கிவிட்டார். பூனையாக மாறிய எலி அங்கிருந்து துள்ளிக் குதித்து ஓடிவிட்டது.


சில நாட்கள் சென்றன. முனிவரின் தியானம் மீண்டும் அழுகைக் குரலால் தடைபட்டது. கண்திறந்து பார்த்தார். "ஐயா என்னை ஒரு நாய் விரட்டிக்கொண்டே வருகிறது. என்னை அது எப்போது கடித்து தின்றுவிடுமோ... எனக்குப் பயமாக இருக்கிறது. நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அந்தப் பூனையாக மாறிய எலி கேட்டது. முனிவரின் மனது இரக்கத்தால் இளகியது; உடனே அந்தப் பூனையை ஒரு நாயாக மாற்றி அனுப்பி வைத்தார்.

சில நாட்கள் கழித்து இப்போது நாயாக மாறிய அந்த எலி ஓடி வந்து தன்னை ஓர் ஓநாய் கொடுமைப் படுத்துவதாக முறையிட்டது. எனவே அந்த நாயை ஓநாயாக மாற்றினார் அந்த நல்ல உள்ளம் படைத்த முனிவர். அவ்வாறு ஓநாயாக மாறிய அந்த எலியை ஒரு புலி துரத்தத் தொடங்கியது. புலியின் தாக்குதலுக்குப் பயந்து திரும்பவும் முனிவரிடம் வந்து முறையிட்டது. அந்த முனிவர் "பயப்படாதே! யாரும் உன்னை எதுவும் செய்ய முடியாது. இதோ உன்னை ஒரு புலியாக மாற்றுகிறேன்" என்று கூறி அதைப் புலியாக மாற்றினார்.

அது புலியாக மாறியவுடன் அதன் மனதில் ஆணவம் ஏற்பட்டது. தன்னைப் பற்றி, தன் வலிமையைப் பற்றி உயர்வாக நினைத்தது. உடனே தனது வாயைத் திறந்து அந்த முனிவரையே தின்றுவிடுவதற்கு அவர்மேல் பாய்ந்தது. எதிர்பாராத இந்த மாற்றத்தைக் கண்ட முனிவர் அதிர்ச்சியடைந்தார். அது சீற்றமாக மாறியது. தன்னைத் தாக்க வந்த புலியைப் பார்த்து, " சீ... சீ எலியே!" என்றார். அவ்வளவுதான்! புலி எலியானது.

ஆபத்தில் உயிர்காத்து உதவிய முனிவரையே கொல்ல நினைத்த அந்தப் 'புலி'யைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? **"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"** என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் நன்மை செய்தவர்களுக்கே தீமையிழைப்பது கொடுமையிலும் கொடுமையில்லையா?

## உன்னையே ஏற்றுக்கொள்




வீதியில் சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்த வழியே தலையில் ஒரு பெரிய தொப்பியை வைத்துக்கொண்டு சூட்டும் கோட்டும் அணிந்து ஒரு வாட்ட சாட்டமான ஆள் அவர்களைக் கடந்து சென்று கொண்டிருந்தார். அவரைப் பார்க்கவே பிரமிப்பாக இருந்தது. அப்போது காற்று வேகமாக வீசத் தொடங்கியது. அதன் வேகத்தில் அவர் போட்டிருந்த தொப்பி பறந்து போனது. உடனே அவர் பறந்து போன தொப்பியைப் பிடிக்க ஓடினார். அப்போது காற்று இன்னும் அதிகமாக வீசியதால் அவர் தலையில் வைத்திருந்த டோப்பா முடியும் அடித்துக்கொண்டு போனது. பாவம் அந்த மனிதர்! இரண்டையும் துரத்திக்கொண்டு ஓடினார். அவருடைய தலை கோழி முட்டை போல் மொட்டையாக இருந்தது. அதைப்பார்த்த சிறுவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

அந்த மனிதர் தொப்பியையும் டோப்பா முடியையும் கையில் எடுத்துக்கொண்டு அந்தச் சிறுவர்களைப் பார்த்துத் தானும் சிரித்துக்கொண்டே, " பிள்ளைகளே என் முடியே என் தலையில் நிற்கவில்லை; இன்னொருவர் முடி எப்படி நிற்கும்?" என்று வழுக்கை மண்டையைத் தடவி விட்டுக்கொண்டே சென்றார். அப்போதிருந்து அவர் தன் மொட்டைத் தலையை மறைக்கவில்லை. அதனால் அவர் உள்ளத்தில் மகிழ்ச்சியும் மனச் சுதந்திரமும் ஏற்பட்டது. உண்மையை மூடி மறைக்க முடியாது. அதேபோல நம்மிடம் உள்ள குறைகளையும் பூசி மெழுக முடியாது. உடலின் நாற்றத்தை மறைக்க வாசனைத் திரவியத்தைப் போடலாம்; நரை முடிக்குக் கறுப்புச் சாயம் பூசலாம். காப்பியடித்து வெற்றி பெறலாம். ஆனால் உண்மை எப்படியாவது தெரிந்துவிடும். மறைப்பதாலோ பூசி மெழுகுவதாலோ பயனில்லை. குறைகளை நேர்மையோடு ஏற்றுக் கொள்ளும்போதுதான் நாம் வளர்ச்சியும் வாழ்வில் உறுதியும் பெறமுடியும்.

## சிலுவையில் உயிர்நீத்தல்

உச்சி வெயில் காய்ந்துகொண்டிருந்தது. கல்வாரி மலை உச்சியில் ஒரு சூரியன் மாய்ந்து கொண்டிருந்தது. தன் இதழ்களை விரித்து தனிப்பெரும் எழில் சிந்தும் தாமரை மலர் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பில் விழுந்து சிறிது சிறிதாய் கருகுவதைப் போல இங்கே இயேசு இருகரம் விரித்துச் சிலுவையில் சிறிது சிறிதாய்ப் பலியாகிக் கொண்டிருந்தார். இறைவனின் வேதனையைக் கண்டு தவித்த இயற்கை இருளில் மூழ்கியது.

சிலுவையில் தொங்கிய இயேசுவின் இதயம் தனக்குச் சிலுவைத் தண்டனை கொடுத்த எல்லா மக்களையும் கருணையன்போடு நினைத்துப் பார்த்தது. தன்னை




வெறுத்துச் சிலுவையில் அறைந்த அனைவரும் தன் தந்தையின் அருள்பெற்று நலமாக வாழவேண்டும் என்று ஆவல் கொண்டது. அந்த ஆவல் இயேசுவின் இதழ்களில் ஓர் ஒப்பற்ற செபமாக மலர்ந்தது: "தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை." "உங்கள் பகைவரிடம் அன்புகூருங்கள்; உங்களை துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" (மத். 5:44) என்று மலைப்பொழிவில் போதித்த இயேசு இப்போது அதை வாழ்ந்து காட்டுகிறார்.


இவ்வாறு நண்பகல் பன்னிரெண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசு மற்றொரு செபத்தை உரக்கக் கூறினார்: "தந்தையே, எல்லாம் நிறைவேறிற்று, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்". இவ்வாறு கூறி தலைசாய்த்து உயிர் துறந்தார்.

சிலுவையில் தொங்கும் இயேசுவிடம் நீ கற்றுக்கொள்வது என்ன? நீ அவரிடம் பெற்றுக்கொள்ள விரும்பும் வரம் என்ன? இயேசுவின் பாடுகளைத் தியானிப்பதால் உன் வாழ்வில் ஏற்படவிருக்கும் மாற்றம் என்ன?

(தொடரும்)

# தங்கத் திறவுகோல் (5)

## தங்க மாளிகையில்... தோழியருடன்



"என் குட்டி கண்ணா! நீ செய்த நல்ல செயல்களையெல்லாம் நினைத்துப்பார். அம்மாவுக்கு வீட்டில் உதவி செய்தது உண்மை தான். ஆனால் அதை மனமுவந்து நீ செய்ய வில்லை. வெளியேசென்று விளையாட முடிய வில்லையே என்று முணுமுணுத்துக் கொண்டே செய்தாய். அப்படித்தானே?" என்று அந்தப் பெரியவர் கேட்டார். விமலா ஆம் என்று தலையசைத்தாள்.

"அதே போலத்தான், நீ அந்தப் பிச்சைக் காரருக்கு உதவி செய்ததும். இத்தனை நாள் சேமித்து வைத்த காசுகளெல்லாம் போய் விட்டதே என்று கொடுத்த பிறகு வருந்தினாய். இல்லையா கண்ணா?" என்று பெரியவர் கேட்டதற்கும் "ஆம்" என்று விமலா ஒப்புக்கொண்டாள். அந்தக் கிழவிக்குக் கூடையைச் சுமந்தது உண்மையாகவே உதவி செய்ய வேண்டுமென்றா?" "பொம்மை மாளிகையில் நுழைவதற்காகத்தான் உதவி செய்தேன்" என்று விமலா நேர்மையாகப் பதில் கூறினாள்.

"ஆனால் இப்போது நீ அமுதாவுக்கு உதவி செய்தபோது நீ உன்னைப் பற்றியோ பொம்மை மாளிகையைப் பற்றியோ நினைக்கவில்லை. அவளுடைய துயரத்தில் முழு மனதுடன் பங்கேற்றாய். அவளுக்கு எப்படியாவது உதவி செய்ய வேண்டுமென்று துடித்தாய். அவள் உன்னோடு சண்டை போட்டதை யெல்லாம் மறந்துவிட்டு அவளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று ஆசைப் பட்டாய். கைமாறு கருதாது மற்றவர்களுக்கு முழு மனதோடு உதவுவதே இந்த பொம்மை மாளிகையின் இரகசியம். இதோ திறவுகோல், நீ இப்போது உள்ளே நுழைந்து விருப்பம் போல் விளையாடலாம்" என்று பெரியவர் கூறினார். "நான் மட்டுமா? அமுதாவையும் அழைத்துச் செல்லட்டுமா?" என்று விமலா கேட்டாள். "ஓ தாராளமாக! அமுதாவை மட்டுமல்ல; இன்னும் நண்பர்கள் சிலரையும் அழைத்துச் செல்" என்று சொன்னார். பொம்மை மாளிகையின் திறவுகோல் விமலா இதயத்தின் மகிழ்ச்சி மடையைத் திறந்தது.



*(நிறைவு)*

## புனிதர் மரிய வியான்னி



109 பாவ அறிக்கை செய்ய வேண்டியவர் எத்துணை நெருக்கடியில் இருக்கிறார், அல்லது எத்தனை நாள்களாகக் காத்திருக்கிறார் என்பதை எல்லாம்கூட அவரால் அறிய முடிந்தது. பதினாறு பிள்ளைகளின் தாயான ஒருத்தி தன் குழந்தைகளுக்குக் கோயிலில் இடம் தர இயலவில்லை. இதைக் கவனித்த தந்தை விரைந்து எழுந்து வந்து கவலை அடைந்த அவளிடம் "அம்மா கவலைப்பட வேண்டாம் வா" என்று கனிவுடன் அவளை அழைத்துச் சென்றார்.

110 ப்யூ த டோம் என்ற ஊரிலிருந்து வந்த இளம் பெண் லூயிஸ் தோர்தான் தன் வாழ்க்கை நிலையைத் தேர்ந்துகொள்ளத் தெரியாமல் தவித்தாள். தந்தையைக் காண மூன்று நாள் காத்திருந்தாள்.




அணுகி வர இயலவில்லை. வேதனை யோடு திரும்பிச் செல்ல எத்தனித்தாள். அப்போது தந்தை திருமுழுக்கு யோவானின் தலத்திலிருந்து போனவர் அவளிடம் "பதினைந்து நாள் நீ காத்திருக்க வேண்டும். புனிதை பிலோமினாவிடம் வேண்டு. உன் வாழ்க்கை நிலையைப் பற்றி அவள் தெரிவிப்பாள் என்றார்.

111 ஒரு நாள் தந்தை மரிய வியான்னி திருவாளர் ஓரியோலை அழைத்தார். இவர் வழிபாட்டின் போது கோயிலில் மக்கள் ஒழுங்காக வரிசையாக அமர்ந்து கொள்வதைக் கவனிப்பவர். கோயிலில் கடைசியில் சால்வை போர்த்தி இருக்கும் பெண்ணை இங்கே அழைத்து வாரும்" என்றார். அங்கே அவரைக் காண வில்லை. ஓரியோல் திரும்பி வந்தார். "மீண்டும் போய்க் கூப்பிடும். அவர் கருணை இல்லம் அருகே திரும்பிப் போகிறார். அவர் இன்னும் பாவ அறிக்கை செய்யவில்லை" என்றார். ஓரியோல் அவரை அழைத்துவர அவர் மகிழ்ந்தார்.



112 கோயிலுக்கு வந்து தந்தை முன்னே மண்டியிட்டு ஆசி பெறுவோரைப் பற்றி என்ன சொல்வது? ஒரு நாள் வேடிக்கை பார்க்க வந்தான் கடவுள் நம்பிக்கை அற்ற ஒருவன். பெருங் கூட்டம் அங்கே வருவதைக் கண்டு கோபம் கொண்டவன் அவன். 'இந்தச் சாமியார் செத்துப் போனால் நலம்' என்று நறநறவென்று பல்லைக் கடித்துக்கொண்டு சொன்னவன் அவன். தந்தை அவன் முன்னே வந்தார். அவனைச் சிறிது நேரம் உற்று நோக்கினார். தன்னை அறியாமலேயே அவன் முன்னால் நகர்ந்து வந்தான். பாவ அறிக்கை செய்து, மகிழ்ச்சியோடு சென்றான்.



(தொடரும்)

RNI 1316 / 57

26th of every month

Pandianagar S.O.


**REGD. TN/SR/DDL-225/2006-2008**
Licensed to Post without Prepayment /
TN/WPP - 62/SR/2006 - 2008

**Edited & Published by Rev.Fr.M.S.Savariraj, S.J., and Printed at St.Mary's Press, Beschi College, P.B.No.90, Dindigul - 624 001, TamilNadu. ✆ (0451) 2432188**

# கழுதை பாடிய கவிதை

ஜீ.கே. செஸ்டர்டன் என்பவர் புகழ் பெற்ற ஓர் ஆங்கில எழுத்தாளர். இவரது எழுத்தில் சீரிய சிந்தனை இருக்கும். நகைச்சுவையும் இழையோடும். இவர் 'The Donkey' என்று ஒரு குட்டிக் கவிதை எழுதி இருக்கிறார். அதில் க்ழுதையே தன்னைப் பற்றி இவ்வாறு சொல்கிறதாம்!

பெரியோர்களே! தாய்மார்களே! மரங்கள் நடந்தன. மீன்கள் பறந்தன. நிலவு செக்கச் செவேர் என்று இரத்தம் போல் காட்சி தந்தது. இவ்வாறு இந்த உலகத்தில் எல்லாமே தலைகீழாக இருந்தபோது நான் பிறந்தேன். ஏனென்றால் இந்த உலகத்தில் என்னை எல்லாருமே ஏளனமாகப் பார்க்கிறீர்கள். என்மீது பொதியைச் சுமத்துகிறீர்கள். எல்லா வேலைகளையும் நான் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள். ஆனால் உங்களுக்கு யார் மீதாவது கோபம் வந்தால் 'சீ கழுதை' என்று திட்டுகிறீர்கள். என் உருவத்தைப் பார்த்தால் உங்களுக்கு அவ்வளவு அவலமாக இருக்கிறது. என்னை அவமானப் படுத்துவதற்கு நீங்கள் தயங்குவதில்லை. ஆனால் அறிவிலிகளே! என் இதயத்திற்குள்ளே நான் ஓர் ஒப்பற்ற இரகசியத்தை ஒளித்து வைத்திருக்கிறேன் தெரியுமா?



ஒருநாள்... சில மணி நேரம்தான்... ஓர் இனிய, மறக்க முடியாத நிகழ்ச்சி என் வாழ்வில் நடந்தது. என் கால்களுக்கு முன்னால் வெற்றிக்குச் சின்னமாகக் குருத்தோலைகள் பரப்பப்பட்டிருந்தன. என் செவிகளில் 'ஓசன்னா ஓசன்னா' என்னும் வாழ்த்தொலி முழங்கியது. ஆம் அந்தப் புனிதமான நாளில் இந்த அகிலத்தையே படைத்த இறைவன் இயேசுவை நான் என் முதுகில் சுமந்து சென்றேன். இது எனக்குப் போதுமே! இனி நீங்கள் என்னைப் பற்றி எது வேண்டுமானாலும் கூறுங்கள். எனக்குக் கவலையே இல்லை. என் நெஞ்சத்தில் இருக்கும் நிலவை நீங்கள் ஊதி அணைத்துவிட முடியுமா?